**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.08/2018**

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24–ஆம் நாள் புதன் கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | சமயம் | : |
| த/பெ | : கலியபெருமாள் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

<u>**வா.சா.1–ன் முதல் விசாரணை**</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். தாவா சொத்தைப் பொறுத்து என் தந்தை பெயரில் ஏற்பட்டுள்ள மனைவரிப்பட்டா (பட்டா எண்.365) **வா.சா.ஆ.1** ஆகவும், நத்தம் நில அளவை திட்டத்தின் கீழ் என் தந்தைக்கு வந்த விசாரணை அறிவிப்பு **வா.சா.ஆ.2** ஆகவும், தாவா சொத்தைப் பொறுத்து என் சகோதரர் பெயரில் செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் (கோர்வை–2) **வா.சா.ஆ.3** ஆகவும், என் தந்தையின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.4** ஆகவும், என் தந்தையின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.5** ஆகவும், தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரிலும், என் தந்தை பெயரிலும் ஏற்பட்டுள்ள கூட்டுப் பட்டா (பட்டா எண்.365) **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.